
**நவம்பர் – 25**

# TNPSC துளிகள்

- ஏர் இந்தியா நிறுவனமானது, பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தின் (DGCA) CAR 21 அங்கீகாரமாக நிர்ணயிக்கப்பட்ட வடிவமைப்பு அமைப்பு ஒப்புதலை (DAO) பெற்றுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு உலக மண் மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- அஞ்சல் துறையானது அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய் ஒழிப்பு - 2047 குறித்த நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் பொது ஒளிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதி 'Waves' எனப்படும் தனது சொந்த இணையவழி ஒளிபரப்பு (OTT) தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- புனேவைச் சேர்ந்த ஷிவாங்கி தேசாய், 2024 ஆம் ஆண்டு மிஸ் சார்ம் இந்தியா பட்டத்தை வென்றுள்ளதோடு மேலும் வியட்நாமில் நடைபெற உள்ள 2024 ஆம் ஆண்டு மிஸ் சார்ம் போட்டியில் இந்தியா சார்பான போட்டியாளராகப் பங்கேற்க உள்ளார்.
- இந்திய மகளிர் ஹாக்கி அணியானது, சீன அணியினை வீழ்த்தி, மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டியில் வெற்றிப் பெற்றது.
- GAIL (இந்தியா) லிமிடெட் நிறுவனம் ஆனது, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சிறந்த நிதி மாற்றத்திற்கான 2024 ஆம் ஆண்டு SAP ACE விருதை வென்றுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## 16வது நிதி ஆணையம் மற்றும் தமிழ்நாடு




- அரவிந்த் பனகாரியா, தமிழ்நாடு மாநில அரசானது 16வது நிதி ஆணையத்திற்காக நன்கு ஆராய்ச்சி செய்யப்பட்ட, விரிவான மற்றும் 'நிபுணத்துவம் கொண்ட' விளக்க அறிக்கையினை உருவாக்கியுள்ளது என்று கூறினார்.
- தமிழ்நாட்டின் விளக்க அறிக்கை ஆனது, உண்மையில் அதன் பங்கு ஏன் 50% ஆக இருக்க வேண்டும் என்பதை விளக்கும் வகையில் உள்ளார்ந்து ஆராயப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

- கடலோர மாநிலங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் நம் மாநில அரசின் விளக்க அறிக்கையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.
- நிதி ஆணையமானது வருமான தொலைவு/இடைவெளி, பரப்பளவு மற்றும் காடு மற்றும் சூழலியல் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகளைக் குறைத்து, மக்கள்தொகை செயல்திறனுக்கு ஏற்ப கொடுக்கப்படும் நிதியினை நன்கு அதிகரிக்க வேண்டும் என்று அரசு கூறியது.
- 'வருமான இடைவெளி' கணக்கிடும் போது தனிநபர் வருமானத்தை அளவிடுவதற்கு – பெயரளவு வருமானத்தைக் கணக்கிடுவதற்கு பதிலாக வாங்கும் திறன் சமநிலையை (PPP) பயன்படுத்துதல் - வேறு முறையைக் கையாள்வது குறித்து பரிசீலிக்குமாறும் தமிழ்நாடு அரசு ஆணையத்திடம் கோரியுள்ளது.
- வகுக்கக்கூடிய வரிகளின் தொகுப்பில் மாநிலங்களின் பங்கைக் கணக்கிட வருமான இடைவெளி பயன்படுத்தப்படுகிறது.
- இது ஒரு மாநிலத்தின் வருமானத்திற்கும் அதிக வருமானம் கொண்ட மாநிலத்திற்கும் இடையே உள்ள இடைவெளி ஆகும்.
- தமிழ்நாடு வருமான இடைவெளியை 45 சதவீதத்தில் இருந்து (15வது நிதி ஆணையம் பரிந்துரைத்தபடி) 35 சதவீதமாகக் குறைக்கக் கோரியது மற்றும் வாங்கும் சக்தியை ஈடு செய்த பிறகான கணக்கீட்டை மேற்கொள்ளுமாறு கோரியது.
- இதன்படி, வருமான இடைவெளியானது PPP சக்திக்கு ஏற்ப சரி செய்யப்பட வேண்டும் மற்றும் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பைப் பயன்படுத்தி மக்கள் தொகை பெறப்பட வேண்டும்.
- மக்கள்தொகை செயல்திறன் சிறப்பு மதிப்பினை 15 சதவீதத்தில் இருந்து சுமார் 20 சதவீதமாக அதிகரிக்கவும், நகரமயமாக்கலின் பங்கிற்கு சுமார் 10 சதவீத மதிப்பினை வழங்கவும் மாநில அரசு பரிந்துரை செய்துள்ளது.
- மக்கள்தொகையைப் பொறுத்தவரை, 15வது நிதி ஆணையமானது, 15% மதிப்பினை வழங்கி, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களைப் பயன்படுத்தியது.
- 15வது நிதி ஆணையம் ஆனது, மக்கள்தொகை செயல்திறன் மாறிலிக்கு 12.5% சிறப்பு மதிப்பினைப் பரிந்துரைத்திருந்தது ஆனால் தமிழ்நாடு அரசு ஆனது இதனை 20% ஆக உயர்த்த பரிந்துரைத்துள்ளது.
- ஒட்டு மொத்தமாக, வருமான இடைவெளிக்கு 35% மதிப்பு, மக்கள் தொகை மற்றும் மக்கள்தொகை செயல்திறன் ஆகியவற்றுக்கு தலா 20%, பொருளாதாரத்திற்கானப் பங்களிப்பிற்கு 15%, நகரமயமாக்கலுக்கு 10% என மாநில அரசு பரிந்துரைத்துள்ளது.
- தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு மாநிலத்தின் பங்களிப்பு சுமார் 15 சதவீத மதிப்பினைப் பெற வேண்டும்.
- குஜராத் மற்றும் தெலுங்கானா மாநிலங்கள் இதே போன்ற பரிந்துரைகளை வழங்கி உள்ளன.
- உதாரணமாக, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8% தமிழ்நாடு கொண்டு இருந்தால், இந்த அளவுருக்களின் அடிப்படையில் மாநிலத்தின் பங்கு 8% ஆக இருக்கும்.
- செங்குத்து அதிகாரப் பகிர்வை (மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையே) 41 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக உயர்த்தவும் தமிழ்நாடு அரசு கோரியுள்ளது.
- நிதி ஆணையங்கள் ஆனது தமிழ்நாடு மாநிலத்திற்கு உதவும் வகையில் இல்லை, மேலும் 9வது நிதி ஆணையம் ஆனது மாநில அரசிற்கு அதிகப் பங்கைப் பரிந்துரைத்து இருந்தாலும், அதன் பங்கு குறைந்து கொண்டே வருகிறது.
- ஒன்பதாம் நிதி ஆணையத்தின் சுமார் 7.93% என்ற பரிந்துரையிலிருந்து 15வது நிதி

ஆணையத்தின் 4.07% பரிந்துரை வரையில், தமிழ்நாடு மாநிலத்திற்கான அதிகாரப் பகிர்வின் பங்கு தொடர்ந்து சரிவைச் சந்தித்து வருகிறது.

- 15வது நிதி ஆணையமானது பேரிடர் நிவாரணக் குறியீட்டைப் பயன்படுத்தி, பேரிடர் நிவாரண மானியங்களை பகுதியளவில் பகிர்ந்தளித்தது, ஆனால் தமிழக அரசு அதில் சில ஒதுக்கீடுகளைக் கொண்டிருந்தது.
- மாநிலங்களுக்கான அதிகாரப் பகிர்வில் குறைவு மற்றும் மத்திய அரசுடன் இணைந்து செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாநிலங்களின் பங்கு அதிகரிப்பு ஆகிய இரண்டும் மாநில அரசுகளின் சுமையை அதிகப்படுத்தும் இரண்டு முக்கியக் காரணிகளாகும்.

# தேசியச் செய்திகள்

## இந்தியா மற்றும் சுவீடன் இடையிலான 75 ஆண்டுகால உறவுகள்




- சுவீடன் நாடானது 75 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்தியாவின் நிலையான தொழில் துறை வளர்ச்சிக்கான பாதையில் அதிகளவிலான ஆதரவினை வழங்கி வருகிறது.
- அவை மிகக் குறிப்பாக அதிக உமிழ்வு மற்றும் சிக்கலான கார்பன் நீக்கம் போன்ற சவால்கள் உள்ள துறைகளில் ஒத்துழைப்பினை மேற்கொள்கின்றன.
- துபாயில் நடைபெற்ற CO P28 மாநாட்டில், இரு நாடுகளும் இந்தியா-சுவீடன் தொழில் துறை மாற்றக் கூட்டாண்மையை (ITP) தொடங்கின.
- இது தொழில்துறை மாற்றத்திற்கான ஒரு தலைமைக் குழுவின் (LeadIT) இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- எஃகு மற்றும் சிமெண்ட் உற்பத்தித் துறைகளில் மேற்கொள்ளப்படும் முதன்மையான திட்டங்களில் கவனம் செலுத்தி, இந்தியாவிலும் உலக அளவிலும் கனரகத் தொழில் துறைகளின் மாற்றத்தினை விரைவுபடுத்துவதை ITP நோக்கமாகக் கொண்டுள்ளது.

## Bhu-Neer இணைய தளம்

- 2024 ஆம் ஆண்டு இந்தியத் தண்ணீர் வாரக் கொண்டாட்டத்தில் புதிதாக உருவாக்கப் பட்ட "Bhu-Neer (பூ-நீர்)" இணைய தளத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- "பூ-நீர்" என்பது மத்திய நிலத்தடி நீர் ஆணையத்தினால் (CGWA) உருவாக்கப்பட்ட ஒரு மேம்பட்ட இணைய தளமாகும்.
- நிலத்தடி நீர்ப் பயன்பாட்டில் வெளிப்படைத்தன்மை, செயல்திறன் மற்றும் நிலைத் தன்மையை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டு, நிலத்தடி நீர் ஆதாரங்களை

மேலாண்மை செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் இது ஒற்றைத் தீர்வுத் தளமாக செயல்படும்.

❖ இது நிலத்தடி நீர் பிரித்தெடுத்தல், மாநில மற்றும் தேசிய மட்டங்களில் உள்ள ஒழுங்கு முறைகளை நிர்வகிக்கும் சட்டக் கட்டமைப்பைப் பற்றிய சில விரிவான விவரங்களை வழங்குகிறது.




## பீமா சுகம் இணையதளம்




❖ பீமா சுகம் என்பது வாடிக்கையாளர்களே தேர்வு செய்யும் வகையில் பல காப்பீட்டுத் தயாரிப்புகளைப் பட்டியலிடும் ஒரு எண்ணிமத் தளமாகும்.


❖ வாடிக்கையாளர்கள் இந்த ஒற்றைச் சாளரத் தளத்திலேயே தேர்வு செய்யும் விதமாக

பல்வேறு காப்பீட்டு அமைப்புகளின் காப்பீட்டுத் திட்டங்களைப் பட்டியலிடுகிறது.

- இது காப்பீட்டுக் கொள்கைகளை வாங்குதல், விற்றல் மற்றும் சேவை வழங்கல் மற்றும் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு உதவுகிறது.
- காப்பீட்டுத் துறையானது, கடந்த 10 ஆண்டுகளில் 10 சதவீதத்திற்கும் மேலான கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வளர்ச்சியடைந்து வருகிறது.
- 2023-24 ஆம் ஆண்டில், இத்துறை 13% விகிதத்தில் வளர்ச்சியடைந்தது.

# சர்வதேசச் செய்திகள்

## சவக்கடலில் உப்புப் படிகக் கூடுகள்




- சவக்கடலின் தரையில் சுமார் ஒரு மீட்டர் வரை உயரமுள்ள சில வெள்ளை நிற உப்புப் படிகக் கூடுகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் படிகக் கூடுகள் ஆனது, தரைப் பரப்பிலிருந்து அதிக உவர் தன்மை கொண்ட ஒரு திரவம் வெளியேறுவதன் மூலம் உருவாகின்றன.
- மிக அதிக உப்புத் தன்மை கொண்ட நிலத்தடி நீரானது ஏரியின் தரைப் பரப்பிலிருந்து வெளியேறும் போது தாதுக்களின் ஒரு தன்னிச்சையானப் படிகமயமாக்கலால் அவை உருவாகின்றன.
- நடுக்கடல் முகடுகளிலும் மோனோ ஏரியின் துஃபா கோபுரங்களிலும் மிகவும் பெரும் பிரபலமான கருப்பு சல்பைடு படிகக் கூடுகள் காணப்படுகின்றன.

## ஈராக் நாட்டின் தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு

- சுமார் 40 ஆண்டுகளில் முதல் முறையாக ஈராக் தனது விரிவான நாடு தழுவிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தி வருகிறது.
- ஈராக் நாட்டில் கடைசியாக 1987 ஆம் ஆண்டில் நாடு தழுவிய மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- 1997 ஆம் ஆண்டில் நடைபெற்ற அதன் மற்றொரு கணக்கெடுப்பு ஆனது பகுதியளவு

தன்னாட்சி கொண்ட குர்திஸ்தான் பிராந்தியத்தின் மூன்று வடக்கு மாகாணங்களைத் தவிர்த்து விட்டது.

- ஈராக்கின் மக்கள் தொகையானது சுமார் 44.5 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.




## உலகளாவியப் பட்டினி மற்றும் வறுமைக் கூட்டணி




- G20 நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டில், பிரேசில் நாடானது பட்டினி மற்றும் வறுமைக்கு எதிரான ஒரு உலகளாவியக் கூட்டணியை அதிகாரப்பூர்வமாக அறிமுகப் படுத்தியது.
- இந்தியா உட்பட 81 நாடுகள், 26 சர்வதேச நிறுவனங்கள், 9 நிதி நிறுவனங்கள் மற்றும் 31 மனிதவினப் பற்று சேவை அறக்கட்டளைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் இந்தக் கூட்டணியில் ஏற்கனவே இணைந்துள்ளன.
- பட்டினி மற்றும் வறுமையை ஒழிப்பதை ஒரு நோக்கமாகக் கொண்ட நாடுகள் பரஸ்பர (ஒன்றுக்கொன்று தங்களின்) பொதுக் கொள்கைகளை ஆதரிக்கும் தளத்தை இந்தக் கூட்டணி வழங்கும்.
- விருப்பமுள்ள அனைத்து ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் நாடுகள் மற்றும் பார்வையாளர் நாடுகள், மேம்பாட்டிற்கானப் பங்குதார நாடுகள் மற்றும் அறிவு நிறுவனங்களுக்கு இந்தக் கூட்டணியில் இணைய வாய்ப்பு வழங்கப்படுகிறது.
- இந்தக் கூட்டணியின் முக்கியப் பங்குதாரர்களில் FAO, UNICEF, WFP, உலக வங்கி மற்றும் பிற சர்வதேச நிறுவனங்கள் அடங்கும்.

- அதன் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் பின்வருவன உள்ளிட்ட பல்வேறு உத்திகளை உள்ளடக்கியது: பள்ளி உணவு வழங்கீட்டுத் திட்டம்; பணப் பரிமாற்றம்; சிறு விவசாயி மற்றும் குடும்ப வேளாண்மை ஆதரவுத் திட்டங்கள்; சமூக-பொருளாதார உள்ளடக்க திட்டங்கள்; ஒருங்கிணைந்த பேறுகால மற்றும் குழந்தைப் பருவ ஆதரவுத் திட்டங்கள்; மற்றும் நீர் அணுகல் தீர்வுகள்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## யூரேசிய மரங்கொத்தி இனப் பறவை - திருப்பூர்

- திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நஞ்சராயன் குளத்தில் முதன்முறையாக யூரேசிய மரங் கொத்தி இனப் பறவையின் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இந்தப் பறவை ஐரோப்பாவில் இனப்பெருக்கம் செய்து குளிர்காலத்தில் ஆப்பிரிக்க மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு வலசை போகிறது.
- இந்தப் பறவையானது, பொதுவாக இந்தியாவின் வடக்குப் பகுதி முதல் மத்தியப் பகுதி வரையிலான சதுப்பு நிலங்களில் காணப்படுகிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகக் குழந்தைகளின் நிலை 2024

- யுனிசெஃப் அமைப்பானது 2024 ஆம் ஆண்டு உலகக் குழந்தைகளின் நிலை (SOWC-2024) அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- மக்கள்தொகை மாற்றங்கள், பருவநிலை மற்றும் சுற்றுச்சூழல் நெருக்கடிகள் மற்றும் மாற்றமிக்கத் தொழில்நுட்பங்கள் போன்ற மூன்று மிகவும் நீண்ட கால உலகளாவிய ஆற்றல்களின் தாக்கத்தை இந்த அறிக்கை ஆராய்கிறது.
- 2022 ஆம் ஆண்டு முதல், மிக தீவிர வானிலை காரணமாக பள்ளிகள் மூடப்பட்டதனால் உலகம் முழுவதும் 400 மில்லியன் மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.
- 2050 ஆம் ஆண்டுகளில், உலகளாவியக் குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 2.3 பில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டிற்குள் உலகின் குழந்தைகளின் எண்ணிக்கையில் இந்தியா, சீனா, நைஜீரியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பங்கானது மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இன்றைய காலக் கட்டத்துடன் ஒப்பிடுகையில் குழந்தைகளின் எண்ணிக்கையில் 106

மில்லியன் அளவிற்குச் சரிவு இருந்தாலும், இந்தியாவில் தோராயமாக 350 மில்லியன் குழந்தைகள் இருப்பர்.

- 2050 ஆம் ஆண்டுகளில் உலகளவில் சுமார் 60 சதவீத குழந்தைகள் நகர்ப்புறங்களில் வாழ்வார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது, இது 2000 ஆம் ஆண்டுகளில் 44 சதவீதமாக இருந்தது.
- உலகளவில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் உயிர்வாழ்வு விகிதம் ஆனது 2000 ஆம் ஆண்டுகளில் இருந்த 98 சதவீதத்தினை விட சுமார் 4 சதவீதம் அதிகரித்துள்ளது.
- ஒரு குழந்தை 5 வயது வரையில் உயிர் வாழ்வதற்கான நிகழ்தகவு ஆனது 2000 ஆம் ஆண்டில் பதிவான 99.5 சதவீதத்தில் இருந்து 1 சதவீதம் உயர்ந்துள்ளது.
- 2000 ஆம் ஆண்டுகளில் பிறந்த பெண் குழந்தைகளின் ஆயுட்காலம் சுமார் 70 ஆகவும், ஆண்களுக்கு சுமார் 66 ஆகவும் இருந்த நிலையில் இது தற்போது முறையே 81 மற்றும் 76 ஆகவும் அதிகரித்துள்ளது.
- 2050 ஆம் ஆண்டுகளில், 2000 ஆம் ஆண்டுகளில் இருந்த அளவை விட, மிகவும் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் மிக தீவிரப் பருவநிலை அபாயங்களுக்கு ஆளாக நேரிடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் அதிக வருமானம் உள்ள நாடுகளில் சுமார் 95 சதவிகிதத்திற்கும் அதிகமான மக்கள் இணைய வசதியினைப் பெற்றிருந்தன நிலையில் இது குறைவான வருமானம் கொண்ட நாடுகளில் 26 சதவிகிதமாக உள்ளது.




# மாநிலச் செய்திகள்

## 'சுனாமி தாக்குதலை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில் உள்ள' கிராமங்கள்

- ஒடிசாவில் உள்ள இருபத்தி நான்கு கடலோரக் கிராமங்கள் யுனெஸ்கோ அமைப்பின் அரசுகளுக்கிடையேயான கடல்சார் ஆணையத்தினால் 'சுனாமி தாக்குலை மிக நன்கு எதிர் கொள்வதற்கு தயாராக உள்ளவை' என அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- இந்தோனேசியாவில் நடைபெற்ற 2வது உலகளாவிய சுனாமி கருத்தரங்கின் போது இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- மேலும், ஒடிசா மாநிலத்தில் உள்ள இரண்டு கிராமங்களின் 'சுனாமி தாக்குதலை எதிர் கொள்வதற்குத் தயார் நிலையில் உள்ள கிராமங்கள்' என்ற அங்கீகாரச் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன.
- அவை 2020 ஆம் ஆண்டில் சுனாமி தாக்குதலை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில்

உள்ள கிராமங்களாக அங்கீகரிக்கப்பட்டன.

- ஒடிசா மாநிலத்தில் 381 கிராமங்களில் சுனாமி பாதிப்பு அபாயம் உள்ளதாக அரசு அடையாளம் கண்டுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★